## தலைப்பு 304 – வளிமண்டலவியல் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வளிமண்டலவியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வளிமண்டலவியல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதியல்லா சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தால் கொன்கல ரேடார் முறைமை ஸ்தாபிப்பதற்காக ரூபா 402.8 மில்லியன் செலவிடப்பட்டு 13 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அந்த பணிகள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த மூலதன செலவினம் நிதிக் கூற்றுக்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | டொப்லர் ரேடார் முறைமைக்குரிய சொத்துக்கள் பொருட் பதிவேடுகளுக்கு கொண்டுவருவதற்கு உரிய ஆவணங்களை கண்டறிவதற்கு முடியாதிருந்தது. மேலும், 2016.12.31 ஆம் திகதிக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை பெறுமதி இடுவதற்காக பணிப்பாளர் நாயத்தினால் நியமிக்கப்பட்ட குழுவினால் 2020.12.31 ஆம் திகதி வரையில் வழங்கப்பட்ட அறிக்கைகளில் டொப்லர் ரேடார் முறைமைக்குரிய சொத்துக்கள் உள்ளடக்கப்படவில்லை. அதனால் பொருட்பதிவேடுகளுக்கு | இந்த சொத்துக்கள் உரிய பிரகாரம் மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கொண்டுவரப்படாத பொருட்களுக்காக பதிவழிப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. | |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய இலக்கம் 842 என்ற திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் நிலையான சொத்து பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | பிரதான கணக்காளரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் நிலையான சொத்துப் பதிவேட்டை தயாரிப்பதற்காக கட்டிடங்கள், வாகனங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி நாளது வரையாக்குவதற்காக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக சகல சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 791.7 மில்லியன் ஆக இருந்ததுடன், மொத்த செலவினம் ரூபா 369.2 மில்லியன் ஆனமையால் சேமிப்பு ரூபா 422.5 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் 53 சதவீத நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் செலவினங்களை வரையறுத்தல், எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் ஏற்படாமை, காணப்படுகின்ற நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமை, உலகளாவிய பேரழிவுகள் மற்றும் மானியங்கள் போதியளவில் இல்லாமை என்பவற்றின் காரணமாக செயற்திட்டம் தாமதமடைந்தமை இந்த நிதி ஏற்பாடுகளின் | திறைசேரி நிதி ஏற்பாட்டை உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சேமிப்புக்கு காரணமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) 03 மூலன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 377.5 மில்லியன் ஆன மொத்த நிதி ஏற்பாடும் மற்றும் 04 மூலதன செலவினங்களில் 39 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையிலான வீச்சிலும் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் ஏழாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 03 செலவின விடயங்களுக்குரிய ரூபா 1,550,042 பொறுப்புக்கள் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை. | தவறினால் 1402 செலவின விடயத்தின் கீழ் ரூபா 824,398 மற்றும் ரூபா 46,870 பொறுப்புக்களும் 1403 செலவின விடயத்தின் கீழ் ரூபா 607,024 மற்றும் ரூபா 8,474 பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், ஏனைய பொறுப்புக்கள், நிதிக் கூற்றுக்கள் அச்சிட்டதன் பின்னர் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டவைகள் ஆகும். எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணிக்கப்படும். | ஆண்டிற்குரிய சகல பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு தேசிய கணக்ககாய்வு அதிகார சட்டத்தின் 40(2)(1) ஆம் உப பிரிவு. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாத சந்தர்ப்பத்தின் போது இந்த சட்டத்தை அமுல்படுத்தும் திகதி முதல் 02 வருடங்களை விஞ்சாத கால எல்லையில் அந்த நியமனம் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அப்பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை . | இந்த திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் 2019.07.01 ஆம் திகதி முதல் உடனடியாக அமுல்படும் வகையில் பதிலீடு இன்றி சனாதிபதி செயலகத்திற்கு இடம் மாற்றம் வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்கள கடமைத் தேவைகளை குறிப்பிட்டு மீண்டும் அரச நிர்வாக அமைச்சிற்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் 2022.03.22 ஆம் திகதி முதல் அந்த பதவியின் கடமைகளை பதிற்கடமை ஆற்றுவதற்காக (தமது உள்ளபடியான பதவிக்கு மேலதிகமாக) இலங்கை நிர்வாக சேவையின் III தரத்தின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த கால எல்லை தற்போது முடிவடைந்துள்ளது.<br>வெற்றிடமாக காணப்படுகின்ற உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு நிரந்தரமாக உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாருக்கு 2022.08.25 ஆம் திகதியிலும் மீண்டும் கோரிக்கை விடப்பட்டிருந்தது. அதனால் திணைக்களத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் | சட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இந்த திணைக்களத்திற்காக உள்ளக கணக்காய்வாளரை நியமித்தல் எங்களின் கட்டுபாட்டுக்கு அப்பாற்பட்ட விடயமாகும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை. | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 272(3) | செலுத்தப்பட்ட சகல உறுதிச் சீட்டுக்களும் அதற்குரிய மாத இறுதியில் இருந்து 06 மாதங்களுக்கு மேற்படாத காலம் கடப்பதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2022 மே மாதத்திற்குரிய ரூபா 319,358 பெறுமதியுடைய 04 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்விற்காக உரிய மாதத்தின் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் அரச கணக்காய்வு பிரிவிற்கு வழங்கப்பட்ட பின்னர் கணக்கு பிரிவிற்கு கிடைத்துள்ளது. | செலுத்தப்பட்ட சகல கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் உரிய மாதத்தின் இறுதியில் இருந்து 06 வாரங்களுக்கு மேற்படாத காலம் கடப்பதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571(3) | 02 வருடங்களை விஞ்சிய பிணை வைப்புக்களின் தொகை தவிர கூட்டு மொத்தமாக ரூபா 449,279 ஆன வைப்புக்கள் சந்தர்ப்ப சூழ்நிலையின் பிரகாரம் உரிய கணக்கிற்கோ அல்லது அரசாங்க வருமானத்திற்கோ செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ரூபா 479,279 தொகையில் ரூபா 30,000 உத்தியோகத்தர்களின் பிணைப் பணமாக இருந்ததுடன், மிகுதி பணம் தொடர்பாக உரிய கணக்கிற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக்களை இனங்கண்டு அவற்றுக்குரிய கணக்குகளுக்கு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 891(1) | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை வைப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைப்புச் செய்ய வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு பிணை வைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிணை வைக்க வேண்டியவர்களிடம் இருந்து அவற்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டி | | | |
| (i) | 3.4.3 ஆம் பிரிவு | வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக வழங்குனர்களைப் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டடிருக்கவில்லை. | Yellow pages இல் இருந்து திணைக்களத்திற்கு அண்மையில் உள்ள வழங்குனர்கள் தெரிவு செய்து பதிவு செய்யப்பட்டிருந்தனர். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 4.2.1 ஆம் பிரிவு | விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான பெறுகைத் திட்டத்திற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுன், அதன் பின்னர் எதிர்காலத்தில் விரிவான திட்டமும் தாயரித்த அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (iii) | 4.2.1(உ) ஆம் பிரிவு | பிரதான பெறுகைத் திட்டம் 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்தில் நாள் தோறும் நாளதுவரையாக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதான பெறுகைத் திட்டத்திலிருந்து எதிர்வரும் 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்தில் தினந்தோறும் நாளது வரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டள்ளது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 6.3.1 “இ” ஆம் பிரிவு | “கேள்விதாரர்களுக்கு ஆலோசனை” என்ற ஆவணத்தில் குறித்துரைத்த பிரகாரம் “மூலப் பிரதி” அல்லது “பிரதிகளுக்காக” தெளிவாக அடையாளம் இடப்பட்ட மற்றும் தனியான முத்திரை வைக்கப்பட்ட கேள்வி ஒரு மூலப் பிரதியில் அல்லது தேவையான பிரதி எண்ணிக்கையில் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் கூட்டுமொத்தமாக ரூபா 3,911,660 பெறுமதியுடனான இரண்டு பெறுகை கேள்வி ஆவணங்களில் மேற்கூறப்பட்ட பிரகாரம் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கவில்லை. | 21 கேள்வி ஆவணங்களில் Format and signing of Bid படிவத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் “மூலப் பிரதி” அல்லது “பிரதிக்காக” தெளிவாக அடையாளம் இடப்பட்ட மற்றும் தனியாக முத்திரை வைகக்ப்பட்ட கேள்வி ஒன்று மூலப் பிரதி அல்லது தேவையான பிரதிகளின் எண்ணிக்கையில் சமர்ப்பிக்க வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கோவைகளில் இணைக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை பரீட்சிப்பதன் மூலம் விடயங்களை உறுதிப்படுத்த முடியும். | -மேற்படி- |
| (ஈ) | 2014 ஒக்டோபர் 14 ஆம் திகதிய 2/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை மார்ச் 16 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | திணைக்களத்தின் பிரதான அலுவலகம், வெளி அலுவலகங்கள் மற்றும் AWS நிலையங்களில் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகளுக்காக குறித்துரைத்த காலத்தில் உத்தியோகத்தர்கள் நியமிக்க வேண்டியிருந்ததுடன், கடந்த நாட்களில் வரையறுக்கப்பட்ட எரிபொருள் அளவு விநியோகிக்கப்பட்டதன் காரணமாக மற்றும் வெளிவாரி அலுவலகம் மற்றும் AWS நிலையங்களில் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகளுக்காக உரிய நேரத்தில் போக்குவரத்து வசதிகளை வழங்கும் போது பிரச்சினைகள் தோன்றியதன் காரணமாக பொருள் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகளும் | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வை மேற்கொண்டு அந்த அறிக்கை குறித்துரைத்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தாமதமடைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு செயற்பாடுகளை விரைவாக பூர்த்தி செய்து இந்த மாத இறுதி அளவில் அறிக்கையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம். | |
| (உ) | அரச நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய கடிதத்தின் iv ஆம் பந்தி. | நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின படிகள் போன்றவை உள்ளபடியான கடமை நேரத்திற்கு பின்னர் செலுத்தப்படுகின்ற படிகளுக்காக நேரத்தை அடிப்படையாகக் கொள்வதாயின் அக்காலம் கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு இன்று 2022 செப்டம்பர் வரையில் மேலதிக கடமைகளுக்காக 1/20 படியாக ரூபா 10,396,033 செலுத்தப்பட்டிருந்தது. | வேலைப் பதிவேட்டில் D (பகல்) சேவை முறையாக 08.00 மணித்தியாலம் முதல் 16.00 மணித்தியாலம் வரையும், N (இரவு) சேவை தடவைகள் 16.00 மணித்தியாலம் முதல் அடுத்த நாள் 08.00 மணித்தியாலம் வரை கவனத்தில் கொள்ளப்படுகின்றது. இது வரையில் நேர அட்டவணை இயந்திரத்தில் ஒரே நேரத்தில் சேவை பூர்த்தி செய்து வெளியேறுதல் மற்றும் மீண்டும் வருகை தரல் பதிவினை இடுவதற்கான வசதிகள் காணப்படவில்லை. நேரப் பதிவு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடி அந்த வசதிகளை ஸ்தாபிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் எதிர்காலத்தின் போது ஒவ்வொரு அலுவலகத்திற்கும் நேரக் குறிப்பு இயந்திரங்களை கொள்வனவு செய்யும் போது இந்த வசதிகளின் மாதிரிகளை உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். 16 மணித்தியால இரவு சேவை தடவைகள் வரையறுக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் உள்ள வளிமண்டலவியல் திணைக்களத்தின் வேலைப் பதிவேட்டில் கடமைகளில் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களாக இருக்கின்றமையால் உத்தியோகபூர்வ வீடு, போக்குவரத்து வசதிகள் இன்றிமையால் இரவு 12 மணிக்கு சேவைக்கு வருகை தரல்/ வெளிச்செல்லுதல் பிரயோகரீதியில் இல்லை. உரிய உத்தியோகத்தர்களுக்காக 1/20 படி 08 மணித்தியாலங்கள் தொடர்ச்சியான சேவைக் காலம் சேவையாற்றியமைக்காக செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலதிக சேவைத் தடவை அல்லது அரசாங்கத்தின் விடுமுறை தினங்களில் மேற்கொள்ளப்பட்ட 08 மணித்தியால சேவை தடவைகளுக்காக மாத்திரம் ஆகும். | |
| (ii) | 2006 மே 30 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை 09/2006 | மேவுகை செய்யப்படாத தாமதங்கள் மற்றும் குறுங்கால விடுமுறைகள் 02 தவிர மு.ப. 9.00 மணியின் பின்னர் வருகைக்காக உத்தியோகத்தரின் விடுமுறைகளில் (1/2) கழிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், வருகை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் 11 பேர்களின் 90 சந்தர்ப்பங்களின் போதும், அபிவிருத்தி உத்தியோகத்தர் 05 பேரினது 17 சந்தர்ப்பங்களின் போதும் அவ்வாறு விடுமுறைகளில் இருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை . | திணைக்களத்தின் நேரக் குறிப்பு இயந்திரத்தில் காணப்படுகின்ற சிறு வழுக்கள் மற்றும் கடந்த ஆண்டுகளில் வருகையின் போது ஏற்பட்ட இடையூறுகள் என்பவற்றை மேலும் கவனத்தில் கொண்டு 2022 திசெம்பர் மாதம் வரை இந்த திணைக்களத்தில் கனிஷ்ட ஊழியர்கள் தவிர ஏனைய சகல உத்தியோகத்தர்களினதும் விடுமுறைகளை பரீட்சித்த போது மு.ப. 9.03 வரை சலுகை வழங்கப்பட்டு அதன் பின்னர் தாமதமாக வருகை தந்தமைக்காக விடுமுறைகளை கழித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் போது மு.ப. 9.00 முதல் மு.ப. 9.03 வரையான காலத்தில் வருகை தருபவர்களின் வருகை மு.ப. 9.00 ஆக கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 2023 ஆம் ஆண்டு முதல் மேவுகை செய்யப்பட்டாத தாமதங்கள் தொடர்பாக குறித்துரைத்த பிரகாரம் | -மேற்படி- |

நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அது தொடர்பாக சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என தயவுடன் அறியத்தருகின்றோம்.

**2.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்து வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 05 வருடங்களை விஞ்சிய சேவையை விட்டுச் சென்ற ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 121,830 கடன் மீதி மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அங்கத்தவர் கடன் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சேவையை விட்டுச் சென்ற எம்.எஸ். திலகரத்ன என்பவரின் கடன் தொடர்பாக பின்வரும் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>கடன் மீதியை அறவிடுவதற்காக திரு. பி.எம்.எஸ். திலகரத்ன என்பவரை தொடர்புபடுத்திக் கொள்வதற்கு முடியாமையினால் அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 இன் 1 ஆம் பகுதியின் 3.1 ஆம் பந்தியில் நிதிப் பிரமாணம் 113(6)(ஆ) இன் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் பீ கணக்கில் அறவிட வேண்டிய ரூபா 121,830 நிலுவை கடன் மீதியை கைவிடுவதற்காக அரச நிதி திணைக்களத்தின் அங்கீகாரத்தினை வழங்குமாறு கோரி இருந்ததுடன், அரச நிதி பணிப்பாளர் நாயகத்தால் அந்த உத்தியோகத்தரின் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மீண்டும் இந்த கடன் மீதியை தீர்க்குமாறு உத்தியோகத்தருக்கு | நிலுவை கடன் மீதியை அறவிடும் திட்டமொன்றை முறைப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக இது வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்துடன், 2022.11.10 ஆம் திகதி கலந்துரையாடப்பட்டிருந்ததுடன், இந்த விடயங்கள் தொடர்பாக மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுவதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணி ஒருவர் வாய்மொழி மூலம் எங்களுக்கு அறிவித்திருந்தார். | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டம் (304-2-1-13-2509 இற்காக ரூபா 1.5 மில்லியன் நிதி ஏற்பாடுகளில் எந்தவொரு தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க செலவினத்தை கட்டுப்படுத்துதல் என்ற வகையில் 2022.04.26 ஆம் திகதி இலக்கம் 03/2022 என்ற தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தியாவசிய பணிகளுக்காக மாத்திரம் நிதிஏற்பாட்டை ஈடுபடுத்த வேண்டியிருந்ததுடன், ஏனைய பணிகள் தற்காலிகமாக கைவிடுவதற்கு ஏற்பட்டிருந்தது. அதனால் எதிர்பார்க்கப்பட்ட நிதி இலக்கினை அடைவதற்கு முடியாதிருந்தது. இந்த செலவின விடயத்தின் கீழ் | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அத்தியாவசிய பணிகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டு செலவினம் கட்டுப்படுத்தப்பட்டயினால் நிதிசார் செயல்முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்டுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொத்துவில், அநுராதபுரம், மட்டக்களப்பு, கட்டுகஸ்தோட்டை, மஹாஇலுபள்ளம, மன்னார், இரத்தினபுரி, குருனாகல், வவுனியா, முல்லைத்தீவு போன்ற வளிமண்டளவில் பிரதேச அலுவலகங்கள் அமைந்துள்ள 10 காணி பிரதேசங்கள் திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த நில பிரதேசங்களை கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என தயவுடன் அறியத்தருகின்றோம். | திணைக்களம் பயன்படுத்துகின்ற சொத்துக்களை திணைக்களத்தின் பெயரில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஜப்பான் நிதி உதவின் கீழ் (JICA) 2008 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 570 மில்லியன் பெறுமதியான 38 வளிமண்டலவியல் தானியங்கி காலநிலை முறைமைகள் மூலம் வெப்பநிலை, ஈரப்பதன், மழை வீழ்ச்சி, காற்றின் வேகம் மற்றும் திசை, அமுக்கம், சூரிய கதிர் வீச்சுக்களின் அளவு போன்றவற்றை பராமீற்றரில் அளவிடும் உபகரண | 2022.12.31 இல் உள்ளவாறு தானியங்கி காநிலை நிலையங்களில் செயற்பாடு நிலை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு<br><br>• M வகையின் 18 நிலையங்களில் உப முறைமைகளில் பரா மீற்றர்களில் ஈரப்பதன் 02 உம், அளவுருக்கள் 03 உம், 02 களஞ்சியங்களில் தரவு காட்சி | சொத்துக்களை உரிய பிரகாரம் பராமரித்து முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

முறைமை மேலதிக பாகங்களுக்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை ரூபா 123 மில்லியன் செலவினம் செய்யப்பட்டிருந்தது. இந்த உபகரண முறைமை ஸ்தாபிப்பதற்கு உரிய கொள்வனவுகளுக்காக முறையான அங்கீகாரத்துடன் கோவைகள் உரிய பிரகாரம் பராமரித்து பெறுகைகள் பிரிவில் காணப்படாதிருந்ததுடன், 20 உபகரண முறைமைகளில் (02 அகற்றுவதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தது.) வளிமண்டளவியல் பிரதேச அலுவலக வளவுகளிலும் மிகுதி 16 ஏனைய நிறுவன வளவுகளிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வளிமண்டளவில் சுற்றாடலில் பொருத்தப்பட்டுள்ள உபகரண முறைமைகள் மூலம் 07 பராமீற்றர்களும், ஏனைய சூழலில் பொருத்தப்பட்டுள்ள முறைமைகளில் 05 பராமீற்றர்களில் இருந்தும் அளவிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இந்த 38 முறைமைகளில் உப முறைமைகளின் உபகரண எண்ணிக்கை அதிகமாக செயலிழந்து காணப்பட்டது.

திரைகள் 02 உம், 04 பட்டரிகளும், 04 தரவு தொடர்பாடல்களும் என செயலிழந்து காணப்பட்டது.

- C வகையின் 18 நிலையங்களில் (01 செயலிழந்துள்ளது) உப முறைமைகளில் பராமீற்றர்களான அளவுருக்கள் 07 உம், தரவு களஞ்சியம் 08 உம், தரவு காட்சிப்படுத்தும் திரைகள் 08 உம், சூரிய கலங்கள் 01 உம், 11 பட்டரிகளும், தரவு தொடர்பாடல் 14 உம் ஆக உப முறைமைகள் செயலிழந்து காணப்பட்டது.

(இ) 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பற்றரிகளின் ஆயுட் காலம் முடிவடைந்தமையால் செயலிழந்த நிலைமையில் காணப்படுகின்ற தானியங்கி காலநிலை வளிமண்டளவியல் நிலையங்கள் 14 ஆகும். பற்றரிகளின் ஆயட்காலம் முடிவடைந்தமையினால் செயலிழந்த நிலைமையில் காணப்படுகின்ற தானியங்கி வளிமண்டளவியல் நிலையங்களுக்காக தேவையான பட்டரிகளை பெற்றுக் கொள்வதற்கு இது வரையிலும் கோரிக்கை செயலிழிந்த நிலையில் காணப்படுகின்ற தானியங்கி காலநிலை நிலையங்களை செயற்பாடுள்ள நிலைமைக்கு உட்படுத்துதல்

| | | | |
|---|---|---|---|
| | அதற்குரிய பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையினால் தானியங்கி காலநிலை நிலையங்களில் செயற்திறன் மற்றும் வினைத்திறன் தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த பணிகள் 02 மாதங்கள் போன்ற காலத்தில் மேற்கொள்வதற்கு முடியுமாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம். புற்றரிகள் பொருத்தாமல் அதற்கான தேவையான தொடர்பு சாதனங்களை பொருத்துதல் பொருத்தமற்றிருந்தமையும் பட்டரிகளை பொருத்தியதன் பின்னர் தொடர்பாடல் உபகரணங்களை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | வேண்டும். |
| (ஈ) | நாடு முழுவதும் சம்பிரதாய மழை அளவிடும் 444 தொகுதிகள் பரந்து காணப்பட்ட போதிலும், அதன் மூலம் தொடர்ச்சியாக தகவல்கள் கிடைக்காத 45 மழை மாணிகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சம்பிரதாய மழை மாணிகளில் 444 தொகுதிகள் நாடு முழுவதும் பரந்து காணப்பட்டதுடன் அவற்றின் தரவினை பெற்றுக் கொள்ளல் அந்த உபகரணங்கள் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் அல்லது தனியார் நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற நபர்களினால் சுயமாக தொண்டர் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகும். கடந்த காலம் முதல் இந்த மழை மாணிகளில் சில மழை மாணிகளின் தரவுகள் எங்களுக்கு கிடைக்கப் பொறாமையை காணக்கூடியதாக இருந்தது. இந்த செயற்பாடுகளை தொண்டர் அடிப்படையில் மேற்கொள்கின்றமையினால் எங்களுக்கு அவைகளுக்காக அதிக அக்கரையொன்றை செலுத்துமாறு அந்த தொண்டர் உத்தியோகத்தர்களுக்கு கூற முடியாதிருந்தது. | தொடர்ச்சியாக தரவுகள் கிடைக்காத மழை மாணிகளில் இருந்து தொடர்ச்சியாக தரவுகளை பெறும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எனினும், எங்களால் அவ்வப்போது மீள் நினைவூட்டல் கடிதம் மூலம் அந்த நிறுவனங்களுக்கோ அல்லது நபர்களுக்கோ அறிவிக்கப்படுகின்றது. எந்தவொரு தொகையும் செலுத்தாமல் எங்களுக்கு முயற்சி எடுக்கும் 400 மழை மாணிகளுக்கும் அதிகமாக தற்போது தரவுகள் பெறப்படுகின்றது. இதிலிருந்து முறையாக தரவினை பெற்றுக் கொள்வதாயின் திணைக்களத்திற்கு கணிசமான கிரயமொன்றை செய்யவேண்டி ஏற்படும். | |
| (உ) | கெப் வண்டியொன்று 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை ஓட்டத்தில் ஈடுபடாதிருந்ததுடன், 05 வருடங்கள் முழுவதும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமல் ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. 2022 மார்ச் 10 ஆம் திகதி வாகனத்தின் சாரதியினால் இந்த கெப் வண்டி துருப்பிடித்துள்ள பகுதிகளை சரிசெய்து தருமாறு கோரிக்கை விடப்பட்டிருந்ததுடன், 2022 திசெம்பர் 01 ஆம் திகதி பழுதுபார்த்தலுக்காக கூறு விலை பெறப்பட்டிருந்தது. எனினும், 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் இந்த பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | பெறப்பட்ட மதிப்பீடுகளுக்கு இடையே ஆகக் குறைந்த விலை வழங்கியிருந்த கராஜ் தெரிவு செய்யப்பட்டு அதன் பிரகாரம் திணைக்கள பெறுகைக்குழு மூலம் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கையொன்று பிரதான நிதி உத்தியோகத்தரிடம் கோரப்பட்ட போதும் வாகன பழுதுபார்த்தலுக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவொன்று திணைக்களத்தில் நியமிக்கப்படவில்லை. எனினும், பாதுகாப்பு அமைச்சின் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் இந்த மதிப்பீடு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் இது சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், எங்களுக்கு தொழில்நுட்ப | வாகனத்தை உரிய பிரகாரம் பழுதுபார்த்து ஓட்டத்திற்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மதிப்பீட்டு குழுவொன்றை நியமிப்பதற்கு போதியளவான காலம் காணப்படவில்லை. அதன் பிரகாரம் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. | |

## 3.3 நட்டம் மற்றும் இழப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கொன்கல ரேடார் முறையை ஸ்தாபிப்பதற்கு எடுத்துவரப்பட்டிருந்த உபகரணங்களில் ரூபா 9.1 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் தொலைந்துபோயிருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட இழப்பு மற்றும் நட்ட ஆவணங்களில் அந்த பதிவேட்டில் அப்பெறுமதி ரூபா 8.7 மில்லயன் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த தொலைந்து போனமைக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு அந்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் டொப்லர் ரேடார் முறைமை ஸ்தாபிப்பதற்கு நிர்மாணிக்கப்பட்ட தூண்களுடனான கட்டிடம் மற்றும் அதிலுள்ள பொருட்கள் தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினால் 2021.03.10 ஆம் திகதி கொன்கல பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் தற்போது காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் தூண்களுடனான கட்டிடம் தற்போதும் அதில் இருக்கின்ற இராணுவத்தினருக்கு பயன்படுத்துவதற்காக தற்காலிகமாக கையளிக்கப்பட்டிருந்தது. இந்த தொலைந்து போனமைக்கும் மற்றும் | இந்த தொலைந்து போனமைக்கும் மற்றும் தோல்விடைந்த செயற்திட்டத்திற்கும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்கண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வெற்றியளிக்காத செயற்திட்டத்திற்கும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரை இனங்காண்பதற்காக 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது. கொன்கல டொப்லர் ரேடார் தூண் கட்டிடத்தில் காணப்பட்ட பொருட்கள் தொலைந்தமை தொடர்பாக இந்த திணைக்களத்தால் அனுப்பப்பட்ட நிதிப் பிரமாணம் 104(3) ஆரம்ப அறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 104(4) இறுதி அறிக்கையில் தொலைந்து போன பொருட்கள் தொடர்பாக அண்ணளவான மதிப்பீட்டின் படி ரூபா 9,147,765 பெறுமதி குறிப்பிடப்பட்டிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். எனினும் இழப்பு மற்றும் நட்ட பதிவேட்டை பரீட்சிக்கும் போது முன்னர் அந்த பதிவுகளை இட்ட உத்தியோகத்தரால் காணாமல் போன பொருட்கள் தொடர்பாக அண்ணளவான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு இடையே ஒரு விடயம் (Three Phase Jinasena Water Pump - ரூபா 400,000) குறைத்து பதியப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் இழப்பு மற்றும் நட்ட பதிவேட்டில் நட்டம் ரூபா 8,747,765 ஆக (ரூபா 9,147,765 - ரூபா 400,000) குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஆம் ஆண்டில் வங்கிக்கு நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட ரூபா 169,250 தொகையை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக்களுக்காக உரிய பிரிவுகளுக்கு அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நேரடியாக செலுத்தப்பட்ட ரூபா 41,913 இல் ரூபா 900 வங்கி காசோலை மதிப்பிழந்த கட்டணம் (ரூபா 450 + 450) ஆக அறவிடப்பட்டுள்ளது. மீண்டும் அது திணைக்களத்தின் கணக்கில் செலவு வைக்குமாறு வங்கிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், இது வரையிலும் தீர்த்து வைக்கப்படவில்லை. இந்த ரூபா 41,913 மிகுதி தொகை இலங்கை வங்கியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவாகும். அந்த உறுதிச் சீட்டு 2023.04.19 ஆம் திகதிய உறுதிச் சீட்டு இலக்கம் p23/4/25 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | பெறுவனவுகள் உறுதிப்படுத்தப்படாத காசோலைகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 இன் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், திணைக்களம் மீளாய்வாண்டிற்காக செயலாற்றல் அறிக்கை தயாரித்து இருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படுவதுடன், தயாரித்து முடிவடைந்த பின்னர் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை குறித்துரைத்த திகதியில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 62.3 மில்லியன் ஆன 19 பெறுகை பணிகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் பெறுகை குழுவின் படி உரிய தினங்களின் போது பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | BD/CBP/01/01/04-2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் கீழ் திறைசேரி செயலாளரால் அரசாங்க செலவினங்களை கட்டுப்படுத்துதலின் கீழ் சகல அமைச்சு செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கு அறிவித்தல் வழங்கியதன் படி கீழே உள்ள படிமுறைகளை கட்டாயம் பின்பற்றுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதில் முதலாவதாக குறிப்பிடப்பட்ட பிரகாரம் ‘‘செயற்திட்டத்தை அமுல்படுத்ததல், வேலை அல்லது பொருட் கொள்வனவிற்காக (பாதீட்டு முன்மொழிவையும் உள்ளடக்கிய) பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ள/ ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள சகல செயற்திட்டங்களையும் தற்காலிகமாக நிறுத்துதல்’’ என்ற விடயத்தை அடிப்படையாகக் கொண்டு உரிய ஆண்டின் அத்தியாவசிய வளிமண்டளவியல் உபகரணங்கள் தவிர ஏனைய சகல கொள்வனவுகளையும் கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகை திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை தொழில்நுட்ப சேவையின் வளிமண்டளவியல் அவதானிப்பு தொடர்பாடல் உத்தியோகத்தருக்காக ரூபா 3,000,000 செலவில் 03 பாடநெறிகள் வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) அந்த பாடநெறிக்கு 92 உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்ததுடன், அதில் 29 பேரின் வருகை 80 சதவீதமாக இல்லாமை மற்றும் 05 பேர்கள் பங்குபற்றாமையின் காரணமாக பாடநெறியை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. சான்றிதழை பெற்ற உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள் காணப்படாதிருந்ததுடன், ஆளணிக் கோவைகளில் சான்றிதழ் பத்திரங்களின் பிரதியும் உள்ளடக்கப்படவில்லை. பாடநெறிக்கு பங்குபற்றாத உத்தியோகத்தர்கள் மற்றும் பாடநெறியை குறித்துரைத்த பிரகாரம் பூர்த்தி செய்யாத 34 உத்தியோகத்தர்கள் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்ததுடன், பாடநெறிக் கட்டணத்தை அவர்களிடம் இருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை | கொவிட் - 19 நிலைமையின் கீழ் 2020 ஆம் ஆண்டில் பங்குபற்றுதல் தொடர்பாக பிரச்சினைகள் தோன்றியிருந்தமையும், முன்னைய ஆண்டுகளின் போது பங்குபற்றிய சகலருக்கும் பல்கலைக்கழகத்தின் மூலம் அந்த சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் பங்குபற்றலில் பிரச்சினைகள் காணப்பட்டமையால் பல்கலைக்கழகத்தின் மூலம் அது தொடர்பாக திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2022.08.09 ஆம் திகதிய EB/TRN/CB-DOM கடிதம் மூலம் 80 சதவீதம் இல்லாத உத்தியோகத்தர்களை விடுவிப்பதற்கான காரணங்கள் கோரப்பட்டிருந்தது. இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் | நிறுவனத்தனால் வழங்கப்படுகின்ற பாடநெறிகளுக்கு உத்தியோகத்தர் பங்குபற்றுதல் மற்றும் அவற்றை உரிய பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு முறையான திட்டமுறைமையொன்று தயாரிப்பதற்கும், குறித்துரைத்த பிரகாரம் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படவில்லை. | தேவையாயின் ஆளணிக் கோவையில் உள்ளடக்குவதற்கு அந்த உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். எதிர்காலத்தில் பதவி உயர்வுகளுக்காக இந்த பாடநெறியை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், அந்த சந்தர்ப்பத்தின் போது ஆளணிக் கோவையில் இடுதல் கட்டாயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | தானியங்கி வளிமண்டளவியல் நிலையங்களில் பராமரிப்பு/ பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்களின் பழுதுபார்த்தல் செயற்பாடுகளுக்காக தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தர்களுக்கு இந்த பாடநெறி நடாத்தப்பட்ட போதிலும், 2020 வரையிலும் AWS முறைமையில் 90 சதவீதம் மாத்திரம் உரிய பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளாமையினால் செயலிழந்து காணப்பட்டதுடன், தானியங்கி தரவுகள் பிரதான அலுவலகத்திற்கு அறிக்கையிடல் நிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே முறைமை பயன்படுத்தப்படாமல் வளிமண்டலவியல் அவதானிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திட்ட முறைமைக்கு இணங்கவும் இந்த படநெறி நடாத்துதல் நோக்கமாக இருந்த | இந்த பாடநெறியில் இருந்து பெறப்பட்ட அறிவினை பயன்படுத்தி தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்கள் இது வரையில் AWS முறைமையில் பராமரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்றனர். போக்குவரத்து வசதியீனம் மற்றும் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையினால் இந்த பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக பிரதான அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் நாடு முழுவதும் அனுப்ப வேண்டியிருந்தமை போன்ற இடையூறுகளினால் உரிய நேரத்தில் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அதிக வசதியீனமாக காணப்பட்டது. எனினும், தற்போது காணப்படுகின்ற வரையறுத்த வசதிகளின் கீழ் அந்த பணிகளை படிப்படியாக அபிவிருத்தி செய்து மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், 2022 இன் இறுதி வரையிலும் அந்த முறைமையில் வளிமண்டளவியல் அவதானிப்பு நடவடிக்கைகளுக்கு இணங்காதிருந்தமையால் இந்த பாடநெறி மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கும் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | வளிமண்டளவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களுக்காக தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படுகின்ற கல்விசார் பயிற்சி நிகழ்ச்சித் திட்ட பாடநெறி 2022 ஆம் ஆண்டிற்கு உரியதாக நடாத்தப்பட்ட கல்வி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் 2022 நவம்பர் 09, 10 மற்றும் 11 ஆம் திகதியில் கலாவெவ தேசிய நீர்வாழ் உற்பத்தி பயிற்சி அபிவிருத்தி அதிகார சபையில் நடாத்தப்பட்டிருந்தது. இயலளவு அபிவிருத்தி மற்றும் இயலுமை முன்னேற்றத்திற்காக 2022 ஆம் ஆண்டில் பாதீட்டு நிதிஏற்பாடாக ரூபா 3.5 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும், அந்த நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி ஆண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இல்லாதிருந்ததுடன், பயிற்சி நிகழ்ச்சித் | 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளுவதற்கு தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகள் பாதீட்டு நிதி ஏற்பாடு கோரும் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. போதியளவான நிதிஏற்பாடு காணப்படுமாயின் அந்த முன்மொழிவின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். எங்களது ஏனைய கடமைகளுக்கு இடையூறு இல்லாத வகையில் மேற்கொள்ள வேண்டியிருந்தமையால் வெளிவாரி பயிற்சி நிறுவனத்தில் (வதிவிட பயிற்சியினால்) மேற்கொள்ளகின்றமையினால் நாட்களை தீர்மானிக்க முடியாதிருந்தது.<br><br>இந்த தடவை நிதிஏற்பாடு மிகவும் வரையறுக்கப்பட்டமையால் 2023 ஆம் ஆண்டில் ஒரு நிகழ்ச்சித் திட்டம் மாத்திரம் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் செயல் நடவடிக்கைத் திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை. | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உத்தியோகத்தர்களின் பங்குபற்றலை முறைமைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், செயலமர்வுகளுக்குரிய சகல தகவல்களும் கோவையில் உள்ளடக்குதல் வேண்டும். |

திட்டங்களுக்குரிய கோவைகளில் பயிற்சிக்கு பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் வருகை, செலவினம் தொடர்பாக தகவல் குறிப்புக்கள், நிறுவனம் தொடர்பான தகவல்கள் வதிவிட பயிற்சி பெறுகின்ற உத்தியோகத்தர்களின் பெயர் பதிவேடு, வருகை மற்றும் கையொப்ப பதிவேடு, வதிவிட கட்டணம் தொடர்பான தகவல்கள் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், 03 உத்தியோகத்தர்கள் நடாத்தப்பட்ட செயலமர்வுகளில் பங்குபற்றியிருக்கவில்லை.

## 3.8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட 12 கணக்காய்வு ஐயவினாக்களில் 04 இற்காக பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் இந்த திணைக்களத்திற்காக 12 கணக்காய்வு ஐயவினாக்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அந்த சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்காகவும் பதிலளிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் இது வரையில் 08 கணக்காய்வு ஐயவினாக்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், அந்த கணக்காய்வு ஐயவினாக்களில் 04 இற்காக பதிலளிக்கப்படாதிருந்ததுடன், அந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்காகவும் தற்போது பதில் தயாரிக்கப்படுகின்றது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். | கணக்காய்வு ஐயவினாக்களுக்காக வழங்கப்பட்டுள்ள காலத்தில் பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.9 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | டொப்லர் ரேடார் முறைமை புத்தளம் மற்றும் பொத்துவில் வானிலை நிலைய வளவில் ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்காக 2019 முதல் 2022 வரையில் ரூபா 513.78 மில்லியன் (2022 - ரூபா 376 மில்லியன்) நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், செலவினம் ரூபா 370,161 மாத்திரமாக இருந்தது. உடன்படிக்கை செய்து 06 வருடங்கள் (2017 – 2021) கடந்திருந்த போதும் ரேடார் முறைமையை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டின் போது இறுதி கட்டத்தை அடைந்திருக்கவில்லை. தற்போது விலை அளவுகள் உயர்வடைந்து சென்றமையால் நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் செயற்திட்டத்தின் நிர்மாண செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை. 2022 மே மாதத்தின் போது JICA நிறுவனம் மற்றும் வளிமண்டளவியல் திணைக்களத்தால் 02 ரேடார் முறைமைகளுக்கு பதிலாக ஒரு முறைமையொன்று மாத்திரம் ஸ்தாபிப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்த நிறுவனத்திற்கு | மாற்று வேலைத் திட்டமொன்றுடன் தற்போது செயற்திட்டத்தை அமுல்படுத்தும் நிலையில் காணப்படுகின்றது. எனினும், திணைக்களத்திற்கு கட்டுப்படுத்த முடியாத காரணங்களினால் செயற்திட்டம் தொடர்ந்தும் தாமதமடைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாமைக்கு கொவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக இருந்தது. வளிமண்டளவியல் முன்னறிவிப்புகளின் செயற்பாடுகளின் போது டொப்லர் ரேடார் முறைமை அதிக தேவையாக காணப்பட்டதுடன் அந்த முறைமை இன்றி வளிமண்டளவியல் முன்னறிவிப்பு மற்றும் எதிர்வு கூறல்கள் வழங்குவதற்கு இணங்கியிருந்தது. இறுதி வசனத்தின் இறுதி பகுதி தெளிவில்லை. | செயற்திட்டத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவிக்கப்பட்ட போதிலும், உத்தியோகபூர்வ ரீதியில் காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இதன் பிரகாரம் வளிமண்டளவியல் செயற்பாடுகளின் போது டொப்லர் ரோடார் முறைமை அதிக தேவையாக காணப்பட்ட போதும், 15 வருடங்களுக்கு அண்மித்த காலம் அந்த முறைமையின்றி வளிமண்டளவியல் தகவல்கள் மற்றும் எதிர்வு கூறல்கள் பெறப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | போக்குவரத்து வசதிகள் உரித்தான 05 உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது ஒரு உத்தியோகத்தருக்குரிய போக்குவரத்து படி மற்றும் எரிபொருள் படியாக 2022 ஆம் ஆண்டின் சனவரி முதல் யூலை வரை ரூபா 611,360 வழங்கப்பட்டிருந்தது. அந்த உத்தியோகத்தர் உரிய காலப்பகுதியில் உரிய சேவைக்கு அறிக்கையிட வேண்டிய 101 நாட்களில் சேவைக்கு 23½ நாட்கள் மாத்திரமே அறிக்கையிட்டிருந்தார். | உத்தியோகத்தர்களின் சேவைக்கு வருகை மற்றும் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவிக்குரிய பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்ந்தும் திருப்திகரமற்ற நிலையில் காணப்பட்டதன் அடிப்படையில் 2022.07.20 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்ட பிரகாரம் 2022 ஆகஸ்ட் மாதம் முதல் உத்தியோகத்தர்களுக்கு உரித்தாக மாதாந்த போக்குவரத்து படியை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் படி 2016.03.09 ஆம் திகதி அரச நிர்வாக சுற்றறிக்கை 05/2016 இன் பிரகாரம் மாதாந்த போக்குவரத்து படி செலுத்துதல் தொடர்பாக | உத்தியோகத்தரின் வருகை மற்றும் விடுமுறைகள் பெறுவதை முறைப்படுத்தி படி செலுத்த வேண்டியதுடன் மேலதிக பணம் செலுத்தப்பட்டிருக்கு மாயின் அறவிடுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அனர்த்த முகாமைத்துவ அமைச்சில் இருந்து ஆலோசனை கோரப்பட்டிருந்ததுடன் அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் படி மீண்டும் அந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரலல்’’ இன் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்கினை அடைந்து கொள்ளும் செயல்முன்னேற்றம் 0-49 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டம், அந்த இலக்குகள் மற்றும் செயல்முன்னேற்றம் தொடர்பான எண்ணிக்கை ரீதியான பெறுமதிகள், மேற்பார்வை, பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மீளாய்வு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கம், இலக்குககள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுக்கின்றது. எனினும், திணைக்களத்தால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் திணைக்களத்தில் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் திணைக்களத்திற்கு நேரடியாக பங்களிக்கின்ற 13 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு பங்களிக்கின்றது. இவ்வாறான செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளது. உரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை இனங்கண்டு அந்த நோக்கங்களுக்குரிய பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பிக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய அரசாங்க சபையின் 1975 இன் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டம் மற்றும் 1988 இன் 74 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் (திருத்த) சட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தில் 86 உத்தியோகத்தர்களில் 38 பேர்களினால் வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தலை சமர்ப்பிக்குமாறு திணைக்களத்திற்குரிய உத்தியோகத்தர்களுக்கு ஒவ்வொரு வருடமும் முதலாவது காலாண்டின் போது எழுத்து மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டிற்காகவும் அவ்வாறு அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 48 உத்தியோகத்தர்களினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கல்வி பொதுத்தராதர பத்திர சாதாரண தகைமை மாத்திரம் உள்ள 05 வளிமண்டளவியல் விஞ்ஞானிகள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதகமான காலநிலை நிலைமையின் போது செயற்திறனாக சரியாக எதிர்வு கூறல்களை வெளியிடுதற்கு போதியளவான பயிற்சி வளிமண்டளவியல் | க.பொ.த (சா. தரம்) மற்றும் க.பொ.த (உயர் தரம்) தகைமைகள் உள்ள பதவி உயர்வு பெற்றுள்ள 05 வளிமண்டளவியல் விஞ்ஞானிகளுக்கு தற்போது இருப்பதுடன், அந்த ஐந்து பேர்களினது அடிப்படைத் தகைமைகளின் பிரகாரம் பட்டபின் படிப்பிற்காக அனுப்பப்படவில்லை. அதன் பிரகாரம் தற்போது பயிற்சி மற்றும் பட்டபின் படிப்பு தகைமைகளை பெற்றுக் கொள்ள வேண்டிய | திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் விடயம் தொடர்பாக காணப்படுகின்ற கல்விரீதியான அறிவினை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விஞ்ஞானிகளுக்கு கிடைக்கப் பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களுக்கு அந்த சந்தர்ப்பங்கள் உச்ச அளவில் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | திணைக்களத்திற்காக 2021 ஆம் ஆண்டிற்குரிய மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டிற்கு தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் எதிர்காலத்தில் சகல உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கும் வகையில் மனித வள திட்டம் தயாரித்து செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மனித வள திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |